දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා
அமைச்சர்
Minister } 2784832

ලේකම්
செயலாளர்
Secretary } 2784811

කාර්යාලය
அலுவலகம்
Office } 2785141-50
**Fax**: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය
உமது இல.
Your No. } .....

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
**Ministry of Education**

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

මගේ අංකය
எமது இல.
My No. } ED/03/38/01/62/01
தகவல் தொடர்பாடல்
தொழினுட்பக் கல்வி அலகு

දිනය
திகதி
Date } 2006.09.14

சுற்றறிக்கை எண்:- 2006/33

அனைத்து மாகாண கல்விச் செயலாளர்கள்
மேலதிகச் செயலாளர்கள்
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்
தலைவர் - பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு
தலைமை ஆணையாளர் - கல்விக் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் கல்வி நிர்வாகம்
அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து கல்விக் கல்லூரித் தலைவர்கள்
அனைத்து ஆசிரியர் கல்லூரி அதிபர்கள்
அனைத்து தேசிய பாடசாலை அதிபர்கள்
அனைத்து மாகாண தகவல் தொடர்பாடல் தொழினுட்ப இணைப்பாளர்கள்
அனைத்து வலய தகவல் தொடர்பாடல் தொழினுட்ப இணைப்பாளர்கள்
அனைத்து மாகாண தகவல் தொடர்பாடல் தொழினுட்ப முகாமையாளர்கள்
அனைத்து மாகாண கணினி வள நிலைய முகாமையாளர்கள் ஆகியோருக்கு

## யாவருக்கும் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப அறிவு

01. நோக்கம்

விரைவில் மாறும் புதிய அறிதல்களை, பாடசாலை சமூகத்திற்கும் பெற்றுக்கொடுக்கும் குறிக்கோளுடன் தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தை பாடசாலைக் கலைத்திட்டத்தில் உள்ளடக்கும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மேதகு சனாதிபதி அவர்களின் எண்ணத்தின்படி தகவல் தொடர்பாடல் தொழினுட்ப வாரம் ஒன்று அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், அது 2006 அக்டோபர் மாதம் 09 முதல் 15 வரை கொண்டாடப்படவுள்ளது. இதனோடு இணைந்துசெல்லும் வகையில் கல்வி அமைச்சரின் அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டலின்படி மேற்படி வாரம் பாடசாலைகளிலும் கொண்டாடப்படவிருக்கின்றது. இந்த வாரத்தில் கல்வி அமைச்சின் மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகம், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தேசிய கல்விக் கல்லூரிகள், கணினிவள நிலையங்கள் (CRC) மாகாண தகவல், தொடர்பாடல் தொழினுட்ப நிலையங்கள் மற்றும் தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றினூடாக தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப துறை பற்றி பரப்புரை செய்வதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கல் மற்றும் வழிகாட்டல் முதலியன இச்சுற்றறிக்கையின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றன.

02. வேலைத்திட்டம் தயாரித்தல், செயற்படுத்தல், மற்றும் மேற்பார்வை செய்தல்

தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தை கல்விக்கான ஒரு கருவியாகப் பயன்படுத்துவது பற்றி பாடசாலை முறைமையும் மக்களும் விளக்கம் பெறுவதற்கு இந்த வேலைத்திட்டம் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பிட்ட அவ்வாரத்தில் இந்த வேலைத்திட்டம்

செயற்படுத்தப்படுவது கல்வி நிறுவனத்தில் தலைமையாளர், ஆசிரிய குழுவினர் மற்றும் பணியாள் தொகுதியினர் ஆகியோரின் முழுப்பொறுப்பாகும். ஆகவே, மேற்பார்வை செய்தல் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கல் போன்றவற்றுக்காக குறிப்பிட்ட நிறுவனத்தின் தலைமையாளரைத் தலைவராகக் கொண்டு, ஆசிரியர்கள், மாணவ தலைவர்கள், பெற்றோர், பணியாள் தொகுதியினர் அடங்கிய செயற்குழு ஒன்று அமைக்கப்படல் வேண்டும்.

பொதுவாக வேலைத்திட்டத்தை செயற்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் போன்றவற்றிற்கு மாகாண, வலய மட்டத்திலும் மேற்பார்வைக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். மாகாண மட்டத்திலான மேற்பார்வைக் குழு மாகாண கல்விப் பணிப்பாளரின் தலைமையிலும் வலய மட்டத்திலான மேற்பார்வைக்குழு வலயக் கல்விப் பணிப்பாளரின் தலைமையிலும் அமைக்கப்படல் வேண்டும். வேலைத்திட்டத்தின் இணைப்பாளராக மாகாண மற்றும் வலய தகவல் தொடர்பாடல் தொழினுட்ப இணைப்பாளர்கள் நியமிக்கப்படல் வேண்டும்.

தயாரிக்கப்பட்ட வேலைத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக மாகாண, வலய மற்றும் பாடசாலை தகவல் தொடர்பாடல் தொழினுட்ப வள நிலைய விரிவுரையாளர்களின் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தினைப் பரப்புவதே கல்வி நிறுவனத்தின் முக்கிய பணி என்பதனை நோக்கமாகக் கொண்டு குறிப்பிட்ட வாரத்தில் செயற்பாடுகள் இடம்பெற ஆவனசெய்தல் வேண்டும்.

<u>தகவல் தொடர்பாடல் தொழினுட்ப வாரத்தில் சிறப்புக் கவனத்துடன் செயற்படுத்தப்படும் செயற்திட்டம்</u>

(தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் தற்போது க.பொ.த (சா.த) மற்றும் க.பொ.த (உ.த) வகுப்புகளுக்காக தெரிவுசெய்யப்பட்ட பாடமாக கற்பிக்காத பாடசாலைகள் இந்த வேலைத்திட்டத்தை செயற்படுத்துவது அத்தியாவசியமானதல்ல)

1. தகவல் தொடர்பாடல் தொழினுட்ப வாரம் பற்றி பாடசாலையில் / நிறுவனத்தில் உரிய முறைகளைப் பயன்படுத்தி விளம்பரங்களைச் செய்ய வேண்டும்.

2 தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் தொடர்பான கண்காட்சியை செயற்படச் செய்தல் (இந்த பிரதான கண்காட்சி தகவல் தொடர்பாடல் தொழினுட்ப நிறுவனத்தினால் கொழும்பு பண்டாரநாக்கா அனைத்துலக கண்காட்சி மற்றும் மாநாட்டு வளநிலையத்தில் இடம் பெறும்)

3 தகவல் தொடர்பாடல் தொழினுட்ப முகவர் நிலையத்தால் (ICTA) நிறுவப்பட்ட 'நெனசல' கணினி நடுநிலையத்தோடு தொடர்புடைய மாணவர் தொடர்பாக உரிய வேலைத்திட்டம ஏற்பாடு செய்தல் வேண்டும்.

4 பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் உதவியுடன் பாடசாலை மட்டத்தில் /வலய மட்டத்தில் சொற்பொழிவுகளும், மாநாடுகளும் ஏற்பாடு செய்தல்.

5 மாகாண மட்டத்தில் நடாத்தப்படும் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப போட்டியில் வெற்றிபெறும் ஆசிரியருக்கும், மாணவருக்கும் தகைமைச் சான்றிதழ்கள் வழங்கல் நிகழ்ச்சி விழா நடைபெறும் வாரத்தில் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

6 இதுவரை திறக்கப்படாதிருக்கும் "பாடசாலை கணினி ஆய்வுகூடம் (அலகு) குறிப்பிட்ட வாரத்தில் மாணவர்க்கு உரித்தாக்கப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

7 கணினி, தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் பற்றி மக்களிடையே நிலவும் அலட்சியப் போக்கை நீக்கும் சொற்பொழிவுகளை, கூட்டங்களை ஏற்பாடு செய்தல்.

8 மாகாண மட்டத்தில் /வலய மட்டத்தில் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பாசறையை ஏற்பாடு செய்தல் (இணைப்பு-01 பார்க்கவும்) இதற்காக மாகாண /வலய மட்டத்தில் கணினி இல்லாத பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் மாணவர்களில் பொருத்தமான எண்ணிக்கையினரைத் தெரிவுசெய்து 3 அல்லது 4 நாட்கள் வதிவிட /வதிவிடமற்ற பாசறை ஒன்றை கணினிவள நிலையத்தில் (CRC) /மாகாண தகவல் தொடர்பாடல் தொழினுட்ப வளநிலையத்தில் (PICT) நடாத்துதல்

9 ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களால் அச்சு மற்றும் மின்னூடகங்களில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் பற்றி மக்களுக்கு தெளிவுறுத்தும் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்.

10 பாடசாலைகளில் தகவலியல் கல்வியைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தல்.

11 கவல் தொடர்பாடல் தொழினுட்பம் பற்றிய பல்வேறு (நாடகம், செயலமர்வு) போட்டிகளை பாடசாலை மட்டத்தில் நடாத்துதல். அத்துடன் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப மேம்பாட்டுக்காக உழைக்கும் ஆசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களைத் தேர்ந்தெடுத்து பரிசளித்து ஊக்கமளித்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

அவ்வாறு தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் வளர்ச்சியடையவும், அதனை ஒரு சமுதாய மக்களிடையே பிரபல்யப்படுத்தவும் வேண்டிய சகல உச்சக்கட்ட செயற்பாடுகளையும் இந்த தகவல் தொடர்பாடல் தொழினுட்ப வாரத்தில் மேற்கொள்ள வேண்டும்.

ஆரியரத்ன ஹேவகே
கல்விச் செயலாளர்
கல்வி அமைச்சு.

இணைப்பு - 01

## தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப பாசறை

இது வலய அல்லது மாகாண மட்டத்தில் செயற்படுத்தப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட கணினி வள நிலைய அல்லது மாகாண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப வள நிலைய விரைவுரையாளர்களைக் கொண்டு இவ் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும்.

அவசிமாயின் வெளியிலிருந்தும் வளவாளர்களை வரவழைக்கலாம். வேலைத்திட்டத்தில் முதற்படியாக கீழ்வரும் செயற்பாடுகள் உள்ளடக்கப்படல் வேண்டும்:-

- பிள்ளைகள் கணினியைப் பயன்படுத்த ஆர்வம்கொளச் செய்தல்.
- ஆரம்ப கணினி அறிவு
- கணினி விளையாட்டு
- குழு விளையாட்டு
- Chatting, Conferring, Internet, e-mail
- நன்னோக்குத் தலைமைத்துவ மேம்பாட்டுக்கான சொற்பொழிவுகள்.

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා
அமைச்சர்
Minister
2784832
Fax: 2784825

ලේකම්
செயலாளர்
Secretary
2784812

කාර්යාලය
அலுவலகம்
Office
2785141-50
Fax: 2784846

ඊමේල්/ா – மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල

இசுருபாயா
பத்தரமுல்ல.

"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය
எமது இல.
My No.
ED/01/26/2/16/01
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பக் கிளை

දිනය
திகதி
Date
2006.09.22

ඔබේ අංකය
உமது இல.
Your No.
. . . . . .

சுற்றறிக்கை எண்:- 2006/35

அனைத்து மாகாண கல்விச் செயலாளர்கள்
அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து கோட்டப் பொறுப்பு பிரதிக்/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து பாடசாலை அதிபர்கள்

**க.பொ.த (சா.த) தகவல் தொடர்பாடல் தொழினுட்ப (O/L-ICT) பாட வினாப்பத்திர மொழிமூலம்**

இலங்கையின் கல்விச் சட்டகத்துக்குள் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பாடத்தைக் கற்பித்தலின் போதும் பரீட்சைகளை நடாததும்போதும் ஊடக மொழி தொடர்பாக தெளிவுபடுத்துவதே இச்சுற்றறிக்கையின் நோக்கமாகும்.

தகவல் தொடர்பாடல் தொழினுட்பக் கல்வி தொடர்பாக இதற்குமுன் வெளியிடப்பட்ட 2005-04-29 திகதிய இலக்கம் 2005/16 யினைக்கொண்ட சுற்றிக்கைக்கேற்ப வெளியிடப் பட்டுள்ள இலக்கம் ED/03/38/2/16/01 யினையும் 2005-05-31 திகதியையும் உடைய அறிவுறுத்தலில் குறிப்பிடப்படடிருந்த 'க.பொ.த(சா.த) பரீட்சையில் இந்த பாடத்தின் வினாத்தாள் ஆங்கில மொழிமூலம் வழங்கப்படும்' எள்ற துற்று இச்சுற்று நிருபம் மூலம் கிழ்வகுமாறு திருத்தம் செய்யப் படுகின்றது.

தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பாடம் க.பொ.த(சா.த) கலைத்திட்டத்தில் தொழினுட்ப பாடமாக (O/L-ICT) இன்றுவரை நடைமுறையிலுள்ளது. அதுபோல உயர்தர மாணவர்களுக்கும் பொது தகவல் தொழினுட்ப (GIT) பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டது.

2007 முதல் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரணதர தொழினுட்ப பாட வினாத்தாள் சகல மாணவருக்கும் தமது தாய்மொழியிலும் ஆங்கிலத்திலும் வழங்கப்படும். தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பாடம் சாதாரண பாடங்களைவிட வேறுபட்டது. இதன் கலைச்சொற்களை சிங்களத்தில் அல்லது தமிழில் மொழிபெயர்ப்புச் செய்வது குறைபாடுடையதாகலாமாகையால் ஆங்கில மொழிமூல விளக்கத்தை ஊடக மொழிகள் இரண்டிற்கும் பெற்றுக்கொடுப்பதெ இதன் அடிப்படை நோக்கமாகும். இதைக் கவனத்தில் கொண்டு விண்ணப்பதாரியின் பிரதான ஊடக மொழிக்கேற்ப பெறுபேறுகளை வழங்குவதற்கு பரீட்சைத் திணைக்களம் இணங்கியுள்ளது. (உ+தா) விண்ணப்பதாரியின் பிரதான ஊடகமொழி சிங்களமாயின் ஆங்கிலத்தில் வினாப்பத்திரத்துக்கு விடையளித்திருந்தாலும் பெறுபேறு சிங்கள மொழியில்ப் பாடமாகக் கருதியே வழங்கப்படும்)

க.பொ.த(சா.த) தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பாடத்தின் ஊடக மொழி பற்றித் தீர்மானிக்கையில் இந்த சுற்றறிக்கை அறிவுறுத்தலிலை பின்பற்றுமாறு வலியுறுத்துகின்றேன்.

ஆரியரத்ன ஹேவகே
கல்விச் செயலாளர்
கல்வி அமைச்சு.

பிரதிகள்:

- பரீட்சை ஆணையாளர் நாயகம்
- தகவல் தொடர்பாடல் தொழினுட்ப வளநிலைய பொறுப்பாளர்

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } Localiz 2784832 Fax: 2784825

ලේකම් / செயலாளர் / Secretary } 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50 Fax: 2784846

ඊමේල්/ஈ – மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } .....

Tamil Mediu

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල
'இசுருபாயா'
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. } ED/01/26/18/06/01

දිනය / திகதி / Date } 2009.06.01

சுற்றுநிரூப இலக்கம்- 2009/19

அனைத்து மாகாண கல்வி செயலாளர்கள்
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து கல்வி வலயப் பணிப்பாளர்கள்
அனைத்து கல்வியியற் கல்லூரி தலைவர்கள்
அனைத்து ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர்கள்
அனைத்து அதிபர்கள்

## தேசிய மட்ட பாடசாலை தகவல், தொடர்பாடல் தொழினுட்ப திறமைகாண் போட்டி

மேதகு ஜனாதிபதியினால் 2009ம் ஆண்டு தகவல் தொழினுட்பம் மற்றும் ஆங்கில மொழி வருடமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இதனை அடிப்படையாகக் கொண்டு கல்வி அமைச்சின் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பிரிவினால் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பாடத்தினை பிரபலப்படுத்தவும் ஆசிரியர்களின் மாணவர்களின் திறமைகளை மேம்படுத்தவும் இந்த ஆண்டு முதல் எதிர்வரும் ஒவ்வொரு ஆண்டிலும் இப்போட்டி நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த போட்டி தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பாடம் சம்பந்தமாக கல்வி அமைச்சின் தகவல் தொலைத்தொடர்பு தொழினுட்ப பிரிவினரால் வருடாந்தம் நடத்தப்படும் உத்தியோகபூர்வ போட்டியாக அமைவதுடன் இலங்கை கணினி மென்பொருள் உற்பத்தியாளர்கள் சங்கம் (SLASI) மற்றும் இலங்கை கணினி சமூகம் (CSSL) என்பவற்றினால் இது வரை முன்னெடுக்கப்பட்ட போட்டிகள் இனி இத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் என்பது விசேட அம்சமாகும்.

2009ம் ஆண்டு இப்போட்டி தெரிவு செய்யப்பட்ட சில தலைப்புகளின் கீழ் நடைபெறும். எதிர்வரும் ஆண்டுகளில் இத் தலைப்புகள் தேவை கருதி மாற்றப்படலாம். அரசாங்கப் பாடசாலைகள் மற்றும் அரசாங்க அனுமதிப் பெற்ற தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்கள் 6ம் தரம் முதல் 13ம் தரம் வரை கல்வி கற்கும் மாணவ மாணவியர்கள், கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள் (Prospective Teachers) இந்த போட்டிக்கான படைப்புகளை முன்வைக்க முடியும். அனைத்து படைப்புகளும் சுயமானதாக இருக்க வேண்டும். வழங்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டதாக இருக்க வேண்டும். படைப்புகள் தலைப்புகளுடன் பொருந்தக் கூடியதாகவிருக்க வேண்டும். சமூகத்திற்கு தவறான கருத்துக்களை தரும் படைப்புகள் நிராகரிக்கப்படும்.

**A) இந்த போட்டி மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கும்**

**(A.1) மாணவர்களுக்கான இளம் கணினி விஞ்ஞானிகள் போட்டி (YCS)**

இது மென்பொருள் உற்பத்தியாளர்கள் சங்கத்தினால் (SLASI) நடத்தப்படும்.

**(A.2) மாணவர்களுக்கான தேசிய மட்ட பாடசாலை மென்பொருள் போட்டி (NSSC)**

இலங்கை கணினி சமூகத்தினால் (CSSL) நடத்தப்படும்.

**(A.3) ஆசிரியர்கள் / முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான (Prospective Teachers)**

**"படைப்புத்திறன் மிக்க ஆசிரியர்கள்"**

இந்த போட்டி கல்வி அமைச்சினால் நடத்தப்படும்.

**(A.1) இளம் கணினி விஞ்ஞானி போட்டி (YCS)** - இலங்கை மென்பொருள் உற்பத்தியாளர்கள் சங்கத்தினால் (SLASI) நடத்தப்படும்.

இரு பிரிவுகளைக் கொண்ட மாணவர்களுக்கு இரு வேறுப்பட்ட வகையில் போட்டிகள் நடத்தப்படும். முதல் பகுதி 6ம் தரம் முதல் 11 தரம் வரையிலான மாணவர்களுக்கும், இரண்டாவது பகுதி தரம் 12 முதல் 13 வரையிலான மாணவர்களுக்கும் நடத்தப்படுவதோடு கீழ்வரும் விதத்தில் போட்டிகள் நடத்தப்படும்.

| மாணவர் பிரிவு | போட்டி நிலை | தலைப்பு |
|---|---|---|
| பிரிவு - 1<br>கனிஷ்ட பிரிவு (Junio<br>Students) தரம் 1-11 வரை | முப்பரிமாண படைப்பு **(Computer Graphic Presentation)** | 3D Studiomat, Maya ஆகிய (இந்த மென்பொருட்களுக்கு மட்டுமே வரையறுக்கப்படவில்லை) மென்பொருள் பாவனையால் |

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 1ம் திகதியன்று 16 வயதுக்குட்பட்ட மாணவர்கள் ஆனால் 17 வயதுக்கு மேற்படாதவர்கள் இதில் பங்குபற்ற முடியும். | | மேற்கொள்ளப்படும் படைப்புக்கள், முப்பரிமாண பிரயோக முறையும் உள்ளடக்கம். |
| | கணினி வேலைத்திட்டங்கள் **(Computer Applications)** | Pascal, Visual Basic அல்லது Java (இந்த தலைப்புக்களுக்கு மட்டும் வரையறுக்கப்படவில்லை) போன்ற கணினி மொழி மற்றும் தரவுகளை கொண்டு மேம்படுத்தப்பட்ட இணையத்தளம் மற்றும் கணினி வேலைத்திட்டங்கள் உள்ளடக்கம் |
| | கணினி விளையாட்டு விண்ணப்பங்கள் **(Computer Gaming Application)** | கணினி விளையாட்டு முறையை அடியொட்டிய படைப்புக்களைக் கொண்டிருத்தல். |
| | கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள் தொடர்பான படைப்புக்கள் **(Embedded Systems)** | கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள் ஆகிய இரண்டையும் அடியொட்டி படைக்கப்படும் படைப்புக்கள் அடங்கும். |
| பிரிவு - 2 சிரேஷ்ட மாணவர்கள் (Senior Student) ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 1ம் திகதி அன்று 17 வயதுக்குட்பட்ட மாணவர்கள் ஆனால் 20 வயதுக்கு மேற்படாதவர்கள் இதில் பங்குபற்ற முடியும். | பொது திட்டங்கள் **(General Applications)** | இணையம்/கைப்பேசி கணினி தொழில்நுட்பம் போன்ற பாவனை முறைகளை பயன்படுத்திக் கொண்டு முன்வைக்கப்படும் புதிய மென்பொருள் படைப்புக்கள் அடங்கும். |
| | கணினி மென்பொருள், வன்பொருள் தொடர்பான படைப்புக்கள் **(Embedded Systems)** | கணினி வன்பொருள், மென்பொருள் இரண்டையும் உள்ளடக்கிய படைப்புக்கள் அடங்கும். |

| | | |
|---|---|---|
| | ரொபோ தொழில்நுட்பம் **(Robotics)** சலன காட்சிகளை அடிப்படையாகக் கொண்ட படைப்புக்கள் **(Vision Based Applications)** | வெப் கெமரா மற்றும் ரொபோ இணைந்த கணினி வன்பொருள், மென்பொருளை பயன்படுத்தி படைக்கப்பட்ட கணினி வேலைத்திட்டங்கள் உள்ளடங்கியது. கணினித் துறையிலான புதிய கண்டு பிடிப்புக்கள் மற்றும் புதிய படைப்புக்கள். (தேர்வுக்குழுவின் மேற்பார்வையின் பின்னர் ஏற்றுக்கொள்ளப்படும்) |

**(A.2) தேசிய மட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கான மென்பொருள் போட்டி (NSSC)** - இலங்கை கணினி சங்கத்தினால் நடத்தப்படும். (CSSL).

இப்போட்டி மாணவர்களின் வயது தரத்திற்கு ஏற்ப மூன்று பகுதிகளாக பின்வருமாறு நடத்தப்படும்.

1. குழு 1:- குறிப்பிட்ட ஆண்டின் ஜனவரி 1ம் திகதியில் 15 வயதிற்குட்பட்ட மாணவர்கள்.
2. குழு 2:- குறிப்பிட்ட ஆண்டின் ஜனவரி 1ம் திகதியில் 15 வயதான 17 வயதிற்கு மேற்படாத மாணவர்கள்.
3. குழு 3:- குறிப்பிட்ட ஆண்டின் ஜனவரி 1ம் திகதியில் 17 வயதான ஆனால் 19 வயதிற்கு மேற்படாத மாணவர்கள்.

| | | |
|---|---|---|
| | உள்ளக செயற்பாட்டு இலத்திரனியல் பயிற்சி மற்றும் பயிற்றுவிப்பு **Interactive Electronic Learning & Teaching tool.** | பாடசாலை பாடத்திட்டத்திற்கு அமைவான பாடமொன்றிற்கு சம்பந்தமான இலத்திரனியல் கல்வி கற்றல்/கற்பித்தல், வடிவமைத்தல் (10 நிமிடங்களுக்குள் அடங்கல் வேண்டும்) |

(A.3.2) கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான 'படைப்புத்திறன்' போட்டி

| பிரிவு | போட்டி | தலைப்பு |
|---|---|---|
| திறந்த போட்டி | உள்ளக செயற்பாட்டு இலத்திரனியல் பயிற்சி மற்றும் பயிற்றுவிப்பு கருவி **Interactive Electronic Learning & Teaching tool.** | பாடசாலை பாடத்திட்டத்திற்கு அமைவான பாடமொன்றிற்காக உள்ளக செயற்பாட்டு இலத்திரனியல் பயிற்சிகள் பயிற்றுவிப்பு கருவியை வடிவமைத்தல். (10 நிமிடங்களுக்கு வரையறுக்கப்பட வேண்டும்.) |

B) போட்டிகளுக்கான நிபந்தனைகள்

| | | |
|---|---|---|
| இளம் கணினி விஞ்ஞானி (YCS) இலங்கை மென்பொருள் உற்பத்தியாளர்கள் சங்கத்தினால் (SLASI) நடத்தப்படும் போட்டி. | தேசிய மட்டப் பாடசாலை மாணவர்களுக்கான மென் பொருள் போட்டி (NSSC) CSSL இலங்கை கணினி சங்கத்தினால் நடத்தப்படும். | ஆசிரியர்கள், முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான (Prospective Teachers) 'படைப்புத்திறன்' போட்டி - கல்வி அமைச்சினால் நடத்தப்படும் |
| படைப்புகள் தனியாளுடையதாகவும். சுயமானதாகவும் இருக்க வேண்டும். மூலப்பிரதியாக அமைய வேண்டும். | ஒரு பாடசாலையில் இருந்து ஒன்று முதல் மூன்று மாணவர்களைக் கொண்ட குழுக்களை அனுப்ப முடியும். | படைப்புகள் தனியாளுடையதாகவும் சுயமானதாகவும். இருக்க வேண்டும். மூலப்பிரதியாக அமைய வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இவர்களை மூன்று நிலைப்போட்டிகளுக்கும் அனுப்ப முடியும். | |
| படைப்புகள் ஆங்கில மொழியில் அல்லது தாய்மொழியில் அமையலாம். | அவசியமற்றது | படைப்புகள் ஆங்கில மொழியில் அல்லது தாய்மொழியில் அமையலாம். |
| தலைப்புக்கு பொருந்தும் வகையில் படைப்பு அமைய வேண்டும். வழங்கப்படும் செய்தி பாடசாலை மட்டத்திற்கு உகந்ததாக அமைய வேண்டும். | அவசியமற்றது | தலைப்புக்கு பொருந்தும் வகையில் படைப்பு அமைய வேண்டும். வழங்கப்படும் செய்தி பாடசாலை மட்டத்திற்கு உகந்ததாக அமைய வேண்டும். |
| போட்டியாளரினால் ஒரு படைப்பு மட்டுமே முன்வைக்கப்படலாம் | அவசியமற்றது | போட்டியாளரினால் ஒரு படைப்பு மட்டுமே முன்வைக்கப்படலாம் |
| அவசியமற்றது | போட்டியாளர்கள் C/C++ அல்லது VB.NET அல்லது Java ஆகியனவற்றில் அடிப்படை அறிவை கொண்டிருத்தல் வேண்டும். | அவசியமற்றது |
| அவசியமற்றது | வினாக்கள் வழங்கப்பட்டு இரண்டு மணித்தியாலங்களுக்குள் விடைகள் அளிக்கப்பட வேண்டும். | அவசியமற்றது |
| போட்டிக்கு பதிவுசெய்தல், படைப்புகளை சமர்பித்தல் என்பன நிபந்தனை C இல் குறிப்பிட்டுள்ளமைக்கமைய | போட்டிக்கு பதிவுசெய்தல் நிபந்தனை C இல் குறிப்பிட்டுள்ளமைக்கமைய காணப்பட வேண்டும். | போட்டிக்கு பதிவுசெய்தல், படைப்புகளை சமர்பித்தல் என்பன நிபந்தனை C இல் குறிப்பிட்டுள்ளமைக்கமைய |

| | | |
|---|---|---|
| காணப்பட வேண்டும். | | காணப்பட வேண்டும். |
| படைப்புகள் அவ்வவ் போட்டி நிபந்தனைக்கு உட்பட்டவையாக அமைய வேண்டும். இறுதி சமர்ப்பிப்பு படைப்பு இரு மென்பொருள் பிரதிகளைக் கொண்டிருக்க வேண்டும் (சீ.டி.க்களில்) படைப்புடன் அதனை இயக்குவதற்கான மென்பொருள் (Software) ஆலோசனைகளும் அனுப்பப்படல் வேண்டும். விசேடமான மென்பொருள் பயன்படுத்தப்பட்டிருப்பின் அதனை வழங்க வேண்டும். | போட்டியாளர்கள் முன்வைக்கின்ற தீர்வுகள் தொடர்பான படைப்புகள் அனைத்தும் பின்சேமிப்பு (Backup) முறையில் பதிவுசெய்து வைத்திருத்தல் வேண்டும். | படைப்புகள் அவ்வவ்போட்டிகளுக்குரிய நிபந்தனைக்குட்பட்டவையாக அமைய வேண்டும். இறுதி சமர்ப்பிப்பு படைப்பு இரு மென்பொருள் பிரதிகளைக் கொண்டிருக்க வேண்டும் (சீ.டி.க்களில்). படைப்புடன் அதனை இயக்குவதற்கான மென்பொருள் ஆலோசனைகளும் அனுப்பப்படல் வேண்டும். விசேடமான மென்பொருள் பயன்படுத்தப்பட்டிருப்பின் அதனை வழங்க வேண்டும். |
| அவசியமற்றது | போட்டியாளர்களுக்கு உணவு, தண்ணீர் புத்தகங்கள் அல்லது இலத்திரனியல் உபகரணங்கள் எவையும் பயன்படுத்த அனுமதி கிடையாது. குறிப்புகள் குறிப்பதற்காக மட்டும் தாள்கள் வழங்கப்படும் | அவசியமற்றது |

| மேலதிக விபரங்களுக்கு- | மேலதிக விபரங்களுக்கு | மேலதிக விபரங்களுக்கு |
|---|---|---|
| செயலாளர் SLASL, இல.51, சேர் மார்க்கஸ் பெர்னான்டோ மாவத்தை, கொழும்பு07.<br>தொ.பேசி – 011 2665261, 011 4713822<br>∴பெக்ஸ் - 011 4713821<br>மின்னஞ்சல் : slasi@infotel.lk<br>இணையத்தளம் : www.slasi.com | இலங்கை கணினி சங்கம் (CCL),<br>275/75, ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு-07.<br>தொ.பே - 0112 592762<br>∴பெக்ஸ - 0112 508009<br>மின்னஞ்சல் : info@cssl.lk<br>இணையத்தளம் : www.cssl.lk | பணிப்பாளர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கிளை, கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்ல.<br>தொ.பே – 011 2785821<br>∴பெக்ஸ் - 011 2785821<br>மின்னஞ்சல் : ictchamps@gmail.com<br>இணையத்தளம் : www.schoolnet.lk |
| நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது | | |

C) அனைத்து போட்டிகளுக்குமான படைப்புகளை சமர்ப்பித்தல், பதிவு செய்தல் விபரங்கள்

| (C.1) இளம் கணினி விஞ்ஞானி போட்டி (YCS) - இலங்கை மென்பொருள் உற்பத்தியாளர்கள் சங்கத்தினால் (SLASI) நடத்தப்படும். | |
|---|---|
| போட்டிகளுக்கான பதிவுகள் | படைப்புகளை ஒப்படைத்தல் |
| ஒவ்வொரு வருடமும் ஜூலை 17 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு உங்களுக்குரிய பிரிவிற்கு சம்பந்தமான "REGISTRATION-YCS(Group I)" விண்ணப்பப் பத்திரத்தையோ, "REGISTRATION-YCS (Group II)" விண்ணப்பத்திரத்தையோ நிரப்பி | ஒவ்வொரு வருடமும் ஒகஸ்ட் 30 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு முழுமைப்படுத்தப்பட்ட படைப்புக்களை சீ.டியில் மட்டும் உள்ளடக்கக்கூடிய மென்பொருள் பிரதிகளுடன் உங்களுக்கு உரிய பிரிவிற்கேற்ப "ENTRY SUBMISSION FORM-YCS (Group I)" அல்லது "ENTRY |

| | |
|---|---|
| பாடசாலை அதிபரின் அத்தாட்சியுடன் பதிவுத் தபாலில் கீழ்காணும் (D) முகவரிக்கு அனுப்பவும். | SUBMISISON FORM-YCS (Group II)" என்ற விண்ணப்பத்தை நிரப்பி பாடசாலை அதிபரின் அத்தாட்சியுடன் பதிவுத்தபாலில் கீழே (D) உள்ள முகவரிக்கு அனுப்பவும். |
| நீங்கள் அனுப்புகின்ற விண்ணப்ப கடித உறையின் இடது மூலையில் YCS (Group I) அல்லது YCS (Group II) ஆகியதில் உங்களுக்கு பொருத்தமானதை குறிப்பிட்டு பாடசாலை பெயருடன் அனுப்பி வைக்கவும். | |
| (C.2) தேசிய மட்ட பாடசாலை மாணவர்களுக்கான மென்பொருள் போட்டி (NSSC) - இலங்கை கணிணி சங்கத்தினால் நடத்தப்படும். (CSSL). | |
| போட்டிகளுக்கான பதிவுகள் | படைப்புக்களை முன்வைத்தல் |
| ஒவ்வொரு வருடமும் ஜுலை 17 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு உங்களுக்கு உரிய பிரிவின்படி, "REGISTRATION - CSSL (Group 1)" விண்ணப்பத்தையோ, "REGISTRATION _ CSSL (Group 2)" விண்ணப்பத்தையோ, "REGISTRATION - CSSL (Group 3)" விண்ணப்பத்தையோ பாடசாலை அதிபரின் அத்தாட்சியுடன் பதிவுத்தபாலில் கீழுள்ள (D) முகவரிக்கு அனுப்பவும். | அவசியமற்றது |
| நீங்கள் அனுப்புகின்ற தபால் உறையின் இடதுபக்க மேல் முனையில் CSSL (Group 1) அல்லது CSSL (Group 2) அல்லது CSSL (Group 3) ஆகியவற்றில் உங்களுக்கு | அவசியமற்றது |

| | |
|---|---|
| உரிய பிரிவை குறிப்பிட்டு பதிவுத்தபாலில் கீழ் (Dயில்) குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பலாம். | |

**(C.3) ஆசிரியர்கள், முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான (Prospective Teachers)**

**'படைப்புத்திறன் மிகு ஆசிரியர்' போட்டி**

இந்த போட்டி கல்வி அமைச்சினால் நடத்தப்படுகின்றது.

| போட்டிகளுக்கான பதிவுகள் | படைப்புக்களை அனுப்பிவைத்தல் |
|---|---|
| ஒவ்வொரு வருடமும் ஜுலை 17 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "REGISTRATION-TEACHERS(T)" விண்ணப்பத்தையோ "REGISTRATION-TEACHERS(T/T)" விண்ணப்பத்தையோ நிரப்பி பாடசாலை அதிபரதோ, பீடாதிபதியினதோ அத்தாட்சியுடன் கீழ்காணும் (Dயில்) முகவரிக்கு தபாலிடவும். | ஒவ்வொரு வருடமும் ஒகஸ்ட் 30 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு முழுமைப்படுத்தப்பட்ட படைப்புக்களை சீ.டி.க்களில் மட்டும் அடக்கப்பட்ட மென்பொருள் பிரதிகள் இரண்டுடன் உங்களுக்குரிய பிரிவின்படி "ENTRY SUBMISISON FORM-TEACHERS (T)" விண்ணப்பத்தையோ "ENTRY SUBMISISON FORM-TEACHERS (T/T)" நிரப்பி பாடசாலை அதிபர் அல்லது பீடாதிபதியின் அத்தாட்சியுடன் பதிவுத்தபாலில் கீழ் (Dயில்) காணும் முவரிக்கு அனுப்பலாம். |
| நீங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல்முனையில் TEACHERS (T) அல்லது TEACHERS (T/T) என்ற உங்களுக்குரிய பிரிவை குறிப்பிட்டு பாடசாலை பெயருடன் அனுப்பவும். | |

D) அனைத்து போட்டிகளுக்குமான பதிவைப் பெறவும், படைப்புக்களை அனுப்பவும் கீழ்காணும் முகவரியை நாடவும்.

பணிப்பாளர்,
தகவல் தொழில்நுட்ப கிளை,
கல்வி அமைச்சு,
இசுறுபாய,
பத்தரமுல்ல.

E) பொதுவான தகவல்கள்

வருடாந்தம் இப்போட்டி பின்வரும் காலப்பகுதிகளில் நடைபெறும்.

1. பாடசாலைகளுக்கான அறிவுறுத்தல்களை வழங்கல் - ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் வரையில்.
2. மதிப்பீடு - இலங்கை கணினி சங்கத்தினால் (CSSL) நடத்தப்படுகின்ற தேசிய மட்டத்திலான பாடசாலைகள் கணினி மென்பொருள் (NSSC) போட்டிகளை இலங்கை கணினி சங்கம் வழிநடத்தும்; இலங்கை கணினி மென்பொருள் வடிவமைப்பாளர்களின் சங்கத்தினால் நடத்தப்படும் இளையோர் கணினி வல்லுனர்களின் போட்டிகள் (YCS) மற்றும் கல்வி அமைச்சினால் நடத்தப்படும் ஆசிரியர்கள் மற்றும் பயிலுநர் ஆசிரியர்களுக்கான போட்டிகள் கொழும்பு பல்கலைக்கழக கணினிக்கற்கைப் பிரிவினால் வழிநடத்தப்படும்.
3. தேசிய மட்டத்திலான போட்டிக்கு முன்பதாக மாகாண மட்டத்திலான போட்டிகளுக்குரிய சான்றிதழ்கள் வழங்கப்படும்.
4. தேசிய மட்டத்திலான போட்டிகளுக்குரிய சான்றிதழ்கள் வழங்கல் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதத்திற்குள் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் ஆசிரியர்கள், பயிலுநர் ஆசிரியர்களை பங்குபற்றச் செய்ய உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு தயவாய் கேட்டுக்கொள்கின்றேன்.

எம்.எம்.எஸ்.டி.பண்டார,
செயலாளர்,
கல்வி அமைச்சு,
இசுறுபாய,
பத்தரமுல்ல.

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා
அமைச்சர்
Minister } 2784832

ලේකම්
செயலாளர்
Secretary } 2784811

කාර්යාලය
அலுவலகம்
Office } 2785141-50
Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

මගේ අංකය
உமது இல.
Your No. } .....

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
**Ministry of Education**

"ඉසුරුපාය", ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
"இசுருபாய", ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

මගේ අංකය
எமது இல.
My No. } ED/01/26/01/14/01

දිනය
திகதி
Date } 21-06-2011

**Circular No. - 2011/20**

All Provincial Chief Secretaries
All Provincial Secretaries of Education
All Provincial Directors of Education
All Zonal Directors of Education

## Establishment of Information and Communication Technology (ICT) Units

In terms of the 'e-Government' policy of the Government, it is essential that all institutions be strengthened by means of ICT.

Hence, it is important to have a proactive vision with a plan in each Provincial Education Department and Zonal Education Office where the subject of ICT Education is being implemented with a view of creating Sri Lanka a knowledge based society.

In this context, it is compulsory to take immediate actions to establish 'ICT Unit' in every Provincial Education Department and Zonal Education Office under an officer of the Sri Lanka Educational Administrative Service assisted by a suitable staff. This unit will facilitate the subject of ICT and the functions of ICT in the respective province and zone.

Please send details of the officer appointed to be in charge of the ICT Unit and his staff before July 31, 2011.

H.M. Gunasekera
Secretary
Ministry of Education

Copies:

1. Secretary to the President
2. Director (Government Re-engineering Programme), Information and Communication Technology Agency (ICTA)
3. Additional Secretary (Education Quality Development) – Ministry of Education
4. Director of Education (Information & Communication Technology) – Ministry of Education

අමාත්‍යතුමා
அமைச்சர்
Minister } 2784832

ලේකම්
செயலாளர்
Secretary } 2784811

කාර්යාලය
அலுவலகம்
Office } 2785141-50
Fax: 2784846

විද්‍යුත්/ඉ-මෙයිල்/E-mail : isurupaya@moe.gov.lk

මගේ අංකය
எமது இல.
My No. } ED/01/26/01/14/01

දිනය
திகதி
Date } 2011-06-21

ඔබේ අංකය
உமது இல.
Your No. } .....

கல்வி அமைச்சு
**Ministry of Education**

ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
இசுருபாயா ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

சுற்றுநிருப இல. 2011 / 20

சகல பிரதம செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்
சகல வலயக் கல்விப்பணிப்பாளர்கள்

**தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப்பிரிவு (ICT-Unit) புதிதாக உருவாக்குதல்**

அரசாங்கத்தின் ஈ-அரசாங்கம் என்ற (e-government) இலத்திரனியல் அரசுக் கொள்கை சார்பாக எல்லா நிறுவனங்களும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப (ICT) வழிமுறைகளை விருத்தி செய்வது அத்தியாவசியமாகும்.

இதன் பொருட்டு இலங்கையில் ஒரு அறிவு சார் சமூகத்தை உருவாக்கும் நோக்குடன் ஒவ்வொரு மாகாண மற்றும் வலய கல்வித் திணைக்களங்கள் மூலமாக தகவல் மற்றும் தொடர்பாடல் கல்வி (ICT) அமுல் நடாத்தப்படுகிறது. இத்திட்டமானது இந்த மகத்தான நோக்கத்தை அடைவதற்கு மிகவும் அவசியமானதாகும்.

இச்சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு மாகாணக்கல்வித்திணைக்களங்கள் மற்றும் வலயக்கல்வித்திணைக்களங்கள்தோறும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பிரிவு (ICT-Unit) ஒன்று நிர்மாணிக்கப்படவேண்டியது கட்டாய மாக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பிரிவானது இலங்கை கல்வி நிர்வாகசேவையை சேர்ந்த அலுவலர் ஒருவரின் கீழ் பொருத்தமான உதவி அலுவலர் ஒருவரினால் நிர்வகிக்கப்படுவதுடன் இது தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப கல்விசார் நடவடிக்கைகளையும் வேறு (ICT) துறை சார் நடவடிக்கைகளையும் முன்னெடுத்துச் செல்வதனை கண்காணித்தலும் இலகுபடுத்தலும் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மேற்படி நடவடிக்கைக்கு பொறுப்பான அலுவலர் ஒருவரையும், அவரது உதவியாளர் ஒருவரையும் நியமித்து 31.07.2011 க்கு முன்னர் விபரங்களை அனுப்பி வைக்கவும்.

எச்.எம். குணசேகர
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள்
1. ஜனாதிபதியின் செயலாளர்
2. பணிப்பாளர் (அரச மீள்கட்டுமான நிகழ்வு)
3. மேலதிக செயலாளர் (கல்வித் தர மேம்பாடு)

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා
அமைச்சர்
Minister
2784832
2784807
2784825

ලේකම්
செயலாளர்
Secretary
2784812

කාර්යාලය
அலுவலகம்
Office
2785141-50
Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

මගේ අංකය
உமது இல.
Your No. .....

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
'இசுருபாய' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

මගේ අංකය
எமது இல.
My No. ஈஎ/3/37/6/147

දිනය
திகதி
Date 2012.09.28

சுற்றறிக்கை இல.: 35/2012

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்

## மஹிந்தோதய கல்வி அபிவிருத்தி மாதம் - 2012 ஒக்டோபர்
## வலயக் கல்வி அலுவலகம் ஊடாக அமுல்படுத்தப்படும் கல்வி பண்புசார் விருத்தி வேலைத்திட்டம் மற்றும் சேவைகளை வழங்குவதனைப் பலப்படுத்தும் தேசிய வேலைத்திட்டத்தின் துரித அங்குரார்ப்பணக் கட்டம்

கல்விச் சேவை வழங்கலை மிகவும் பயன்மிக்கதாக மற்றும் பண்புசார் தரமிக்கதாக மேற்கொள்வதற்காக வலயக் கல்வி அலுவலகங்களுக்கு விசேட பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. பொதுக் கல்வித் துறையினை உயரிய பண்புசார் தரமிக்கதாக முன்னெடுப்பதற்காக வலயக் கல்வி அலுவலகங்களை பலப்படுத்துவது அத்தியாவசியம் என்பதனால் கல்வித் துறைசார் அபிவிருத்திக் கோட்பாட்டு வேலைத்திட்டம் (2012 - 2016) இன் கீழ் இது பிரதான பணியாகக் கருதப்பட்டுள்ளது. கல்வி முகாமைத்துவம் மற்றும் நிர்வாக ஒழுங்கமைப்புக் கட்டமைப்பின் அமுல்படுத்தப்பட்டுள்ள மட்டம் அதாவது பாடசாலைக்கு அருகாமையில் உள்ள நிறுவனமாக வலயக் கல்வி அலுவலகம், தமது சேவை வழங்குநர்களின் தேவையினை துரிதகதியில் மற்றும் வினைத்திறனுடன் மேற்கொள்ளும் நிறுவனமாக மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

02. கல்வி அமைச்சினால் 2012 ஒக்டோபர் மாதம் மஹிந்தோதய கல்வி அபிவிருத்தி மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன் அம்மாதத்துக்குள் கல்வி முறைமையின் பண்புசார் தரத்தினை மேம்படுத்துவதற்காக பல துரித வேலைத்திட்டங்களை அமுல்படுத்தவும் முறைமையின் நிர்வாக வலையமைப்பின் வினைத்திறனை மேம்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. இம்மாதத்துக்குள் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள்/செயற்றிட்டங்களுக்கிடையே வலயக் கல்வி அலுவலகங்களை மிகுந்த உயரிய பயன்மிக்க மற்றும் வினைத்திறன் மிக்க சேவையினை வழங்கும் நிறுவனங்கள் என்பதனை உறுதிப்படுத்துவது பிரதான முன்னணிச் செயற்றிட்டமாக இனங்காணப்பட்டுள்ளது. இதற்கமைய 2012 ஒக்டோபர் மாதத்திற்குள் கீழ்க்குறிப்பிடப்பட்ட பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வலயக் கல்வி

அலுவலகங்களுக்கு வழங்க மாகாணக் கல்விச் செயலாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் இதற்காகத் தேவையான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்தல் வேண்டும். இதன் போது முன்னெடுக்கப்பட வேண்டிய பிரதான நடவடிக்கையாக அமைவது கடமைச் செயற்பாடுகளை மிகுந்த விரிவான அடிப்படையில் மற்றும் சூழலை மீள் கட்டமைத்தல் ஊடாக வலயக் கல்வி அலுவலகங்களின் உயர்ந்தபட்ச வீனைத்திறன் மற்றும் பயன்பாட்டினை உறுதிப்படுத்தும் அலுவலகமாக மீள் கட்டமைப்பதாகும். இதன் போது கீழ்க்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது.

## 2.1. சேவை வழங்கல் மற்றும் பொறுப்புக்களை உறுதிப்படுத்தல்

i. வலயக் கல்வி அலுவலகத்தின் பலம், பின்னடைவுகள், கல்விச் சந்தர்ப்பங்கள் மற்றும் கல்வியின் சவால் SWOT(Strengths, Weaknesses, Opportunities, Threats) பகுப்பாய்வு ஊடாக இனங்காண்பது (வலயக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில் வலயத்தின் சகல மட்டங்களிலும் உள்ள உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் நடைபெறும் கலந்துரையாடல்கள் மூலம் இப்பகுப்பாய்வுகளை மேற்கொள்ள முடியும். அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர்களின் கருத்துக்களை வினவுவது மிகவும் பயன்மிக்கதாகும்.

ii. வலயத்திற்குரிய நோக்கு, பணிகளை இனங்காணுதல், நோக்கு மற்றும் பணிகள் ஏற்கனவே வரைவிலக்கணப்படுத்தப்பட்டிருப்பின் தேவையான சமகாலப்படுத்தல்களை மேற்கொள்ளும் செயற்பாடுகள் மிகுந்த பொருத்தமிக்கதாக வகுக்கப்பட வேண்டும். நோக்கு மற்றும் பணிகள் தமது சேவைப் பங்களிப்புக்களைக் காணக் கூடியவாறு காட்சிப் படுத்தப்பட வேண்டும்.

iii. வலயக் கல்விப் பணிப்பாளரினால் நீண்ட காலம், நடுத்தரக் காலம் மற்றும் வருடாந்தம் மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்கு அமைவாக நோக்கங்களை வரைவிலக்கணப்படுத்தல்.

iv. சகல வலயக் கல்வி அலுவலகங்கள் 2013-2017 நடுத்தரக் காலக் கல்வி உபாய விருத்தித் திட்டங்கள் மற்றும் 2013 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்படும் திட்டங்கள், கல்வியின் தொழில்சார் கோட்பாடு உட்பட அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு இணைவாகப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட திட்டமிடலாக வகுக்கப்பட வேண்டும். ஏற்கனவே இத்திட்டமிடல்கள் வகுக்கப்பட்டிருப்பின் மேற்கூறப்பட்ட (1) இல் பகுப்பாய்வாளர்களினால் குறிப்பிடப்பட்டுள்ள இனங்காணப்பட்ட நிலைமைகளின் அடிப்படையில் அவற்றை சமகாலப்படுத்த வேண்டும். (பாடசாலைத் திட்டமிடலினை அடிப்படையாகக் கொண்ட உள்ளீடுகள் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களின் தாபன உள்ளீடுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.)

v. வலயக் கல்வி அலுவலகங்களின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்புக்களைத் தயாரித்து தமது சேவை வழங்குநர்களுக்கு காணக்கூடியவாறு காட்சிப்படுத்தல் (ஏற்கனவே ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு தயாரிக்கப்பட்டிருப்பின் தேவையான சீர்திருத்தங்கள்/சமகாலப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

vi. வலயக் கல்வி அலுவலகத்தின் சகல உத்தியோகத்தர்களினதும் செயற்பாடுகள், பணிகள் மற்றும் கடமைப் பொறுப்புக்களை தெளிவாக இனங்கண்டு கடமைப் பொறுப்புக்களை உரிய உத்தியோகத்தர்களுக்கு விரிவான அடிப்படையில் ஒப்படைத்தல். இதற்கமைய சகல உத்தியோகத்தர்களுக்கும் தெளிவான மற்றும் உரிய பணிகளின் இலக்குகள் பொறுப்பளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

vii. சகல பணிகள்/செயற்பாடுகளுக்கான முறைகளை இனங்காணுதல், அவ்வப் பிரிவுகளுக்குள் மற்றும் பிரிவுகளுக்கிடையே கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் ஊடாகக் காணப்படும் இணைப்புக்களை இனங்காண்பதன் மூலம் அதி சிறந்த வினைத்திறனை உறுதிப்படுத்தல்.

viii. கைநழுவியுள்ள சேவை வழங்கல்/பணிகள் 2012 ஒக்டோபர் மாதத்துக்குள் பூர்த்தி செய்ய வேண்டும். இதற்காக துரித, முகாமைத்துவ வேலைத்திட்டம் விசேட செயற்றிட்டமாக ஒழுங்கு செய்ய முடியும். விசேடமாக அதிபர்கள், ஆசிரியர்களின் நிறுவனப் பணிகள் (சேவைப் பணிகள், சம்பளம் மற்றும் சம்பள அதிகரிப்பு, ஓய்வூதிய சம்பளம் தொடர்பான பிரச்சினைகள்) தொடர்பில் ஏற்பட்டுள்ள சகல பிரச்சினைகள் மற்றும் தாமதங்கள் துரித கதியில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ix. பாடசாலை மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களுக்கிடையே சிறந்த இணைப்புக்களை ஏற்படுத்தல், அதன் மூலம் பாடசாலையுடன் தொடர்புபட்ட தகவல்களைப் பெற்றுக் கொள்ள வலய அலுவலகங்களில் விரிவான வேலைத்திட்டங்கள் வகுக்கப்படல் வேண்டும். பாடசாலைகளைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களுக்காக வலயக் கல்விப் பணிப்பாளர் களின் பிரதிநிதி ஒருவரை சகல பாடசாலைகளுக்கும் நியமித்தல் மற்றும் அதன் மூலம் முழுமையான பாடசாலை அபிவிருத்திக்கு ஆலோசனை வழங்கலும், மேற்பார்வை செய்யவும் விரிவான வேலைத்திட்டங்களை வகுப்பது மிகவும் பொருத்தமான செயற்பாடுகளாகும்.

x. வலய மட்டத்தில் ஒழுங்குகள் மற்றும் விரிவான பாடசாலை மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு முறைகளை தாபித்தல்.

## 2.2. வலயக் கல்வி அலுவலகங்களின் சூழலை நவீன மயப்படுத்தல், விருத்தி செய்தல்

i. சகல வலயக் கல்வி அலுவலகங்களையும் மிகவும் அழகான மற்றும் கவர்ச்சி மிக்க அரச நிறுவனங்களாக மாற்றியமைக்கத் தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இதற்காக முதற்கட்டத்தில் வலயக் கல்வி அலுவலகங்களின் கட்டிடங்களை நவீன மயப்படுத்தல்/பழுதுபார்த்தல்/தீந்தை பூசுதல், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் (உதாரணம் : நீர், சுத்திகரிப்பு வசதிகள்), மீள் சுத்திகரிப்பு மற்றும் நாளாந்தப் பராமரிப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

ii. வலயக் கல்வி அலுவலகத்தின் பெயர்ப் பலகையினை கவர்ச்சிகரமாக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் காட்சிப்படுத்தல் வேண்டும். அத்துடன் அலுவலகத்தின்

பிரவேச வீதி, முற்றம் மற்றும் அலுவலகத்தின் சூழலை "பசுமையான அலுவலக சிந்தனை"யின் கீழ் அபிவிருத்தி செய்தல்.

iii. அலுவலக முகாமைத்துவ நடைமுறைகளை வலுவூட்டுவதற்காக சிறந்த முறையில் அலுவலகக் கோவைகளைப் பேணுதல் அவசியமாகும். அதன் பிரகாரம் அலுவலகக் கோவைகள் மீள் ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.

iv. அலுவலகத்துக்குள் திருப்திகரமான சூழலை உருவாக்குவதற்காக தமது வலயத்தின் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களின் புகைப்படங்கள், காட்சிகள் சார்ந்த படங்கள் மற்றும் கல்வி முன்னேற்றத்தினைக் காட்சிப்படுத்துதற்கான அறிவித்தல் பலகைகளையும், காட்சிப்படுத்தல் வேண்டும்.

v. தமது சேவை வழங்குநர்களின் தேவைகளை துரிதகதியில் மேற்கொள்ளும் முறைகள் அமுல்படுத்தப்பட வேண்டும். விசேடமாக ஆசிரியர்கள், அதிபர்களின் பிரச்சினைகள் மற்றும் நிறுவன ரீதியான பிரச்சினைகளை வலயக் கல்வி அலுவலகங்களுக்குச் சமுகமளிக்காது மேற்கொள்ளக் கூடிய முறைகள் வகுக்கப்பட வேண்டும்.

vi. சகல வலயக் கல்வி அலுவலகங்களினதும் தகவல்களும் தகவல் தொழிநுட்ப ரீதியில் பலப்படுத்தப்பட வேண்டியதுடன் இதற்காக வலயக் கல்வி அலுவலகங்களில் காணப்படும் கணினி உட்பட உதிரிப்பாகங்களின் பழுதுபார்த்தல்களும் வலையமைப்பு (Network) செயற்படக் கூடிய நிலைமைக்கு மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். கல்வி அமைச்சினால் மாகாண/வலயங்களை தழுவக் கூடியவாறு ஆசிரியர்களினால் தாபிக்கப்பட்டுள்ள வன்பொருள் மற்றும் வலையமைப்புத் தீர்வுக் குழுவின் உதவியினைப் பெற்றுக் கொள்வதன் மூலம் செலவினத்தைப் பயன்மிக்க முறைக்கு செயற்படுத்த முடியும் என மேலும் வலியுறுத்துகிறேன். போதியளவு கணினிகள் இன்றியிருப்பின் கணினிகளைப் பெற்றுக் கொள்வதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படல் வேண்டும். இவ்வேலைத்திட்டங்கள் நிறைவடைந்ததன் பின்னர் இணையத்தள வசதிகளைப் பயன்படுத்தி தகவல் தொடர்புச் செயற்பாடுகளைப் பேணுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

**2.3. வலயக் கல்வி அலுவலகங்களைப் பலப்படுத்துவதற்காக மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களங்களின் தலையீடுகள் உட்பட உதவிகளைப் பெறல்**

i. 2012 ஒக்டோபர் மாதத்துக்குள் இவ்விசேட செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதற்காக சகல வலயக் கல்வி அலுவலகங்களுக்காக ரூபா ஐந்து இலட்சம் நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல். இதற்காக உலக வங்கியின் உதவியின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள Transforming the School Education System and the Foundation of a Knowledge Hub Project (TSEP) இன் கீழ் 2012 ஆம் ஆண்டுக்குரிய மாகாணக் கல்விப் பொறுப்பாளர்களினால் ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளைப் பயன்படுத்த வேண்டும். இதற்கு உலக வங்கியின் இணக்கம் கிடைக்கப்பெற்றுள்ளது.

ii. மாகாணக் கல்விப் பொறுப்பாளர்களினால் மேற்கூறப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு உரிய ஆலோசனைகள், இலக்குகள் மற்றும் ஒப்பளவுகள் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

iii. 2012 ஒக்டோபர் மாதத்துக்குள் அமுல்படுத்தப்படும் மேற்கூறப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு விசேட முன்னுரிமை வழங்கி சகல வலயக் கல்வி அலுவலகங்களையும் மேற்பார்வை செய்யும் வேலைத்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுதல் வேண்டும்.

iv. வலயக் கல்வி அலுவலகங்களின் முன்னேற்றங்கள், பொறுப்பேற்றல்கள் தொடர்பாக அறிக்கைப்படுத்த விரிவான வேலைத்திட்டங்கள் வகுக்கப்படல் வேண்டும்.

3.0. மேற்கூறப்பட்ட பணிகளுக்கு உரிய 2012 ஒக்டோபர் மாதத்துக்குள் முன்னெடுக்கப்பட்ட பணிகள் தொடர்பான முன்னேற்ற அறிக்கை (மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரதான பிரிவுகளுக்கு உரியதாக) மற்றும் எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பான சுருக்கமான அறிக்கை, 2012 நவம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிப்பதற்கும் கல்வி அமைச்சுக்கு அதன் பிரதியினை அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவதற்காக முன்னுரிமை வழங்கி செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

**எஸ்.எம். கோடாபய ஜயரட்ண**
**செயலாளர்**
**கல்வி அமைச்சு**

**பிரதிகள் :**

1. ஜனாதிபதி செயலாளர்
2. செயலாளர், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு
3. கல்வி அமைச்சின் சகல மேலதிக செயலாளர்கள்
4. கணக்காய்வாளர், கணக்காய்வாளர் திணைக்களம்
5. கல்வி அமைச்சின் சகல கல்விப் பணிப்பாளர்கள்
6. பிரதம கணக்காளர், கல்வி அமைச்சு

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා
அமைச்சர்
Minister } 2784832

ලේකම්
செயலாளர்
Secretary } 2784811

කාර්යාලය
அலுவலகம்
Office } 2785141-50
Fax: 2784846

විද්‍යුත්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

මගේ අංකය
எமது இல.
My No. } ED/01/26/03/01/02

ඔබේ අංකය
உமது இல.
Your No. } .....

දිනය
திகதி
Date } 2014 – 03 - 19

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

ඉසුරුපාය, ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
இசுருபாய, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

Circular Number:- 06/2014

Director General of the National Institute of Education,

Commissioner General of Examinations,

All the Provincial Secretaries of Education,

All the Provincial Directors of Education,

All the Zonal Directors of Education,

All the Principals

## Revision of Syllabus

## Information and Communication Technology – G.C.E. (A/L)

Actions have already been taken to revised the existing syllabus of the G.C.E. (A/L) ICT subject, based on the follow up and studies done by the National Institute of Education.

Accordingly, decision has been taken to remove the selected sections of the identified competency level or the entire competency of the syllabus as follows which was included since 2009.

| Competency Level | Subject Content Removed |
|---|---|
| Competency Level 1.1 | • Definition of knowledge |
| Competency Level 1.5 | • Use of check digits under Data validation methods<br>• Data verification under Modes of data input |
| Competency Level 1.6 | • ICT in advertising<br>• ICT in teaching and learning |
| Competency Level 1.7 | • ICT and other technologies |
| Competency Level 2.1 | • Towards Modern Computers |
| Competency Level 2.3 | • Instruction Set Architecture (ISA)<br>• CISC and RISC Architectures |
| Competency Level 3.4 | • IEEE 754, 32 bit single precision representation of floating point numbers |
| Competency Level 5.3 | • Early memory organizations under Memory Organization<br>• Virtual Memory Management under Maintenance of secondary storage |
| Competency Level 6.1 | • Virtual Machines |
| Competency Level 7.11 | • Completely removed |
| Competency Level 7.12 | • Completely removed |
| Competency Level 7.15 | • Completely removed |
| Competency Level 8.3 | • Basic Digital Encoding Methods |
| Competency Level 9.3 | • Completely removed |
| Competency Level 9.4 | • Meta data under Databases<br>• Application Programs |
| Competency Level 9.5 | • Completely removed |
| Competency Level 9.10 | • DCL<br>• VDL |
| Competency Level 10.6 | • Completely removed |
| Competency Level 10.7 | • Completely removed |
| Competency Level 10.8 | • Completely removed |

The respective number of the competency level in the syllabus are also revised due to this amendment. The revised syllabus has been attached herewith and also it has been uploaded in the web sites www.moe.gov.lk and www.nie.lk . New subject matters have not been added to this revised syllabus and only some sections of the subject content in the previous syllabus have been removed.

The revised syllabus will be implemented targeting the students sitting for the G.C.E. (Advanced Level) Examination in 2015. Accordingly, the question papers will be prepared for all the students who sit for Information and Communication Technology in the G.C.E. (Advanced Level) Examination in 2015 and afterwards.

You are kindly informed to pay your attention to make aware the students and teachers of this revision.

Anura Dissanayake

Secretary

Ministry of Education